**செய்தி வெளியீடு எண்: 629** **நாள்:29.08.2020**

<u>செய்தி வெளியீடு</u>

முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராகப் பணிபுரிந்து வரும் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., அவர்களின் தாயார் திருமதி குப்பம்மா அவர்கள் இன்று (29.8.2020) உடல் நலக் குறைவால் காலமானதையடுத்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள் அனுப்பிய **இரங்கல் கடிதத்தின் விவரம்** பின்வருமாறு:–

---

“தங்களின் அன்பு தாய் திருமதி குப்பம்மா அவர்கள் இன்று (29.8.2020) உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், உங்கள் தாயாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திருமதி குப்பம்மா அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.’’

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**